முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1651

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.04.2024**, சனிக்கிழமை

1. கந்தன் என் அவதார கருணை வடிவே
கலியுகத்தைக் காக்க வந்த தர்ம வடிவே
ஆறுமுக அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சோபகிருது சேல் திங்கள்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 24 ம் நாள், 06.04.2024, சனிக்கிழமை)
அரங்கனுக்கு சக்திபலம் கூட உரைப்பேன்
வாசி வென்ற ஞானியர்கள் படை
வலம் வந்து அரங்கனோடு இருந்தபோதும்
3. ஆசி தந்து அரங்கன் தருகின்ற
உலகோர்க்கான சக்திவழி
அரங்கன் ஆற்றல் குறைந்து வருகுதப்பா
ஆகவே அதன் வழி அரங்கனுக்கு ஆக்கை சோர்வு
4. இடைஇடை சோர்வு வழி தேகமதில்
இயம்பிடுவேன் இளைப்பு வலிநலி சோர்வுகள்
வகைபடா அனுகி நிற்பதாலே
வல்லமை கூடிட அரங்கனுக்கு
5. ஆறுமுகன் யான் இந்த ஞான அறிவுரை ஆசி
ஆற்றல் பெருக வேண்டி தொடர்ந்துரைக்கின்றேன்
உரைக்கவே சக்தி கூடிட
உகந்தபடி அரங்கனுக்கு தொண்டர் படை இனி
6. உயர்வாக குருவாரம் தோறும்
தொடர்ந்து செய்கின்ற பூஜையை
வகைபட உறு எண்ணிக்கை அதிகமாக்கி
வல்லமைபட அரங்கனுக்காய் ஆற்றல்பெருக தொடர்ந்து

7. ஜெபதபங்கள் கூட்ட வேண்டும்
கூட்டுவதோடு அன்பர்கள் செய்துவருகின்ற தர்மத்தில்
அரங்கனுக்கு சமர்ப்பணம் என
ஆற்றல்பட தர்மசேவையில் இணைத்து செய்து பெறுதல் வேணும்
8. இவ்வாறு செய்து வருதல் காண
அந்த தர்ம சக்தி அரங்கனுக்கு பாதுகாப்பு வளையமாக மாறி
ஆற்றல்பட அரங்கன் நிலை இன்னும் கூடவும்
அரங்கனுக்கு சடுதி சக்தி நிலை அதிகமாகி
9. எழுந்தமர்ந்து நடக்க உண்டான
சக்தியும் பெருகவும் வழிவகை செய்யும்
வல்லமை கூடிடவே அரங்கனுக்காய் ஆறுமுகன் இந்த சூட்சுமத்தைச் சொன்னேன்
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–